Ranjit's First Tamil Picture

SITAPAHARANAM

Directed by
M. P. SUNDARA RAJAN

சீதாபஹரணம்



Distributors,
SELECT PICTURES CIRCUIT
BANGALORE

நடிகர்கள்

ஸ்ரீ K ராஜா, B.A., B.L., ...	ராமர்
,, M. S. ராஜகோபாலன் ...	லக்ஷ்மணன்
,, V. ராமசந்திர பாசவதர் ...	இராவணன்
,, T. P. K. சாஸ்திரி B.A., B.L., ...	மாரீசன், பிரகஸ்தன்
,, சி. பி. எஸ். மணி அய்யர் ...	கரன்
,, குஞ்சு பாகவதர் ,, ஸ்வாமிநாதன் ...	ரிஷிகள்
,, பத்மநாபராவ் ,, ஜம்புநாதன் ...	சிஷ்யர்கள்
,, சுப்பய்யா பிள்ளை ...	ஜோஸ்யர்

நடிகைகள்

ஸ்ரீமதி ஸரஸ்வதி ...	ஸீதை
,, சீதாலக்ஷ்மி அம்மாள் ...	சூர்ப்பனகை
,, ராஜம்மாள் ...	காமவல்லி
,, கனகம் ...	மண்டோதரி

கதைச் சுருக்கம்

★

வைகுண்டவாஸியான ஸ்ரீமந்நாராயணனிடம் சமஸ்த தேவதைகளும் போய் ராவணாதிகளான ராக்ஷஸர்களின் உபத்ரவம் தாங்கமுடியாமல் முறையிடுங்காலத்தில் தானே பூலோகத்தில் அவதரித்து ராக்ஷஸர்களை அழிப்பதாக வாக்களித்த பிரகாரம் ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னர்களாய் அயோத்தியாபதியான தசரத சக்ரவர்த்திக்கு திருக்குமாரர்களாய்த்தோன்றி பிதுர் வாக்ய பரிபாலனம் என்கிற வியாஜத்தை கைக்கொண்டு ஸீதா ஸமேதராய் லக்ஷ்மணருடன் தண்டகாரண்யம் சென்று பஞ்சவடியில் ஆனந்தமாய் வாஸம் பண்ணிக்கொண்டு இருந்தார். இந்தக் கதையின் ஆரம்பம் இதுவே.

பஞ்சவடியில் கோதாவரி தீரத்தில் சதிபதிகள் இருக்க வேண்டிய அந்நியோன்னிய பாவத்துடன் இராமரும், ஸீதையும் கொஞ்சி விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். ஸ்ரீராமர் சரணாகதி செய்த ரிஷிகளுக்கு அபயதானம் கொடுக்கிறார். ஒருநாள் இராவணன் தங்கையான சூர்ப்பனகை ஆரண்யத்தில் திரியும்போது ஸ்ரீராமனைப்பார்த்து மோஹித்து அவனை

அடையவேண்டி தன் கோர உருவத்தை மாற்றி அழகுள்ள காமவல்லி என்கிற பெயருடன் இராமனிடம் செல்லுகிறாள். ஏகபத்னி விரதனான இராமன் அவளை லக்ஷ்மணனிடம் அனுப்புகிறான். ஒருவருக்கு ஒருவர் ஹாஸ்யமான தர்க்கங்கள் ஏற்பட்டு கடைசியில் லக்ஷ்மணன் அவள் மூக்கை அறுத்து விடுகிறான். உடனே அவள் தன் சுயரூபத்தை எடுத்துக் கொண்டு கரதூஷணாதிகளிடம்போய் முறையிட அதைக் கேட்ட அவர்கள் இராமனை எதிர்க்கச்செல்லுகிறார்கள். இராமன் ஒருவனாகவே அவ்வளவுபேரையும் ஒரு முகூர்த்தத்தில் வதம் செய்துவிடுகிறான்.

உடனே சூர்ப்பனகை லங்கைக்கு ஓடி தெருவெல்லாம் அல்லோலப் படுத்திக்கொண்டு அரண்மனைக்குள் சென்று பரமசிவ பக்தனான இராவணன் காலில் விழுந்து தனக்கு நேர்ந்த அவமானத்தை தெரிவிக்கிறாள்.

இராவணன் அதன் காரணத்தை கேட்கும்பொழுது தான் ஸீதையைப்பார்த்து பிரமித்து அவனுக்காக அவளைக் கொண்டுவர எத்தனித்ததாயும் அப்பொழுது லக்ஷ்மணன் இப்படிச்செய்துவிட்டதாகவும் பொய்சொல்லி ராவணன் மனதைக் கலைத்து விடுகிறாள். ஸீதையின் அழகைப்பற்றி கேள்விப்பட்ட இராவணன் அவளை எப்படியாவது நாடி மோட்சத்

தை அடைய விரும்புகிறான். இதற்கு உதவிபுரியும்பொருட்டு தன் மாமனான மாரீசனிடம் சொல்லுகிறான். இராம பாணத்தின் மகிமையை அறிந்த மாரீசன் இராவணனுக்கு பலவிதமான புத்திமதிகளை எடுத்துக்கூறியும் கேளாமல் நிர்பந்தம் பண்ணின இராவணனுக்கு பயந்து மாரீசன் வேறுகதியில்லாமல் ஒரு பொன்மானாகமாறி ஸீதையை மயக்க உத்தேசித்து அவள் ஆஸ்ரமத்திற்கு சமீபம் செல்கிறான். ஸீதை அந்த மானைக்கண்டு ஆசைப்பட இராமர் அந்த மானைப் பிடிக்கப் போகிறார். பிறகு என்னவாயிற்று இதன் விபரம் திரையில் தெரியும்.

கோரஸ்

இந்துஸ்தான் பியாக்—தாளம்—தேசாதி

1. இருந்தானே ராமச்சந்திரன்
ரிஷிகளுக்கார்க்கும் வெகுதந்திரன்
அருந்தம்பி மனைவியுடன் பஞ்சவடியில் (இ)

கோஸலை குமரன்
தாஸரின் தாஸன்
மாசற்ற ஜோதி வடிவாய்
அலைந்த முனிவர் சோகம்
ஆகுலமெல்லாம் போக
சலித்தபேர் துன்பம் விரட்ட
வெறித்த ராக்ஷஸர் பலத்தையும் ஓட்ட
தர்மத்தை நிலை நாட்ட (இ)

முத்தேவரின் மூலமுதற்பொருளோ
ஸத்திய தேவனோ ராமன்
எத்தேவனோ
எத்தேவனோடிணைப்பது இவனை
அத்தேவனே மானிடனாகவே (இ)

ராமர் லீலை

சுத்த ஸாவேரி தாளம்—ஆதி

2. அன்பாய் விளையாடி—மானே
என்னுள்ளம் கொள்ளை கொண்டாய் நீ
நின்னலம் நான் கண்டேன் ஹா ஹா

பூங்குலை குலாவும் சோலை
பாங்குள்ளதாய் இருக்குதே
எங்கு எங்குமே செவியினில் எனக்கு
ஓங்கும் மறைநாதம் கேட்குதே

விந்தை விந்தையாய் இங்கே
விதவிதத்தோற்றங்கள் கண்டோம்
அற்புதம் பஞ்சவடி ஹா ஹா

ஏகியது உன் துயரமெல்லாமே
ஏகியது என் துயரமெல்லாமே
மேகநிரவண்ணனுடன் வருகையாலே
உண்மை அல்லவோ
உண்மையே

மஹரிஷி

ராகம்—காபி

3. மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர்
மும்மைதாய

காலமும் கணக்கும் நீத்தகாரணன்
கைவில்லேந்தி

சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து
தொல்லை

ஆலமுமலரும் வெள்ளிப்பொருப்பும் விட்ட
யோத்தி வந்தான்

ஸீதை

ராகம் ப்ரதாபருத்ரி — தாளம் ஆதி

4. பரப்ரம்பமு (பில்லாங்குழல்) Flute

கோரஸ் ரிஷிகள்

ராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஆதி

5. ராமா—சரணம் சரணம் ரகுராமா
தருணமிதுவே கருணை புரிவாய்
அரக்கரின் பாதையை தீர்ப்பாய் (ச)

மூவர் நீயே முதல்வன் நீயே
முற்றும் நீயே மற்றும் நீயே
தவத்தினின்ஞெரு தனிப்பெயரே :
தேவாதி தேவனே காப்பாய் (ச)

சூர்ப்பனகை

ராகம்—பிலகரி தாளம்—திஸ்ரம்

6. இத்தனை நாளிதுபோல்
எந்தன் மனம் ஏங்கில்லை (இ)

கண்டதே தான் காக்ஷி—கண்ணில்
கொண்டது மன்றேகோலம் (இ)

சூர்ப்பனகை

மாண்டு   தாளம்—ஆதி

7. தேவனோ மனிதனோ யாவனோ யௌவனமான
ஸித்தனோ இவன் கர்த்தனோ (தே)

கண்டபெண்கள் ஆவியெல்லாம்
கொள்ளை கொள்ளென்றே பிரமன்
படைத்தானோ என்னை பழித்தானோ (தே)

வசனம்

ஆஹா என்ன ரூபம்! புருஷமோகினி !
இவனை மணந்தாலல்லவோ பாக்கியம் !!
இவனது உருவத்திற்கும் வேஷத்திற்கும்
பொருத்தமே இல்லையே!

மாவுரி சேரிடை பீதாம்பரம் சேராததென்
மாயமோ இது நியாயமோ

சந்திரன் இவன் முகம் என்றால்
வர வர அதன் கலைதேயுமே
களங்கம் தோயுமே (தே)

காமவல்லி

ஜனரஞ்சனி   தாளம்—ஆதி

8. புவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி நானே (பு)

சேவலோன் துணைவனை
செங்கையோன் தங்கை நானே (பு)

திக்கின் மாவெல்லாம் தொலைத்து
வெள்ளிமலை யெடுத்துலக மூன்றும்
காவலோன் பின்னை காமவல்லி
நானே கன்னி-தானே (பு)

ரிஷி

ராகம்—பலஹம்ஸ தாளம்—ஆதி

9. துன்பம் இல்லை இனிமேலே

இன்பமளிக்கவே ரவிகுலத்தினிலே
அன்பாய் அவதரித்தானே ராமன் (து)

மனமோகனனாய் அரண்யம் வந்தான்
மாமுனியாவர்க்கும் அபயமளித்தான்
கரதூஷணர்களை அடியோடொழித்தான்
தாரக நாமன் ராமன் (து)

ராமர் ஸீதை

இந்துஸ்தானி—ப்யாக் தாளம்—ஆதி

10. நலமானதே நாமே வனத்திற்கு வந்தது
நலமானதே வெகு ஆனந்தமே இது

நலமானதே வெகு ஆனந்தமே இது
நலமானதே நானே உம்முடன் வந்தது

அன்னை கைகேயி அன்புடையாள்
அவளாலல்லவோ இந்தபாக்யம்

துன்பம் நீங்கிய ரிஷிகளைப்பார்க்கும்
இன்பமும் அவளாலே
அன்னை நன்மையே அளித்தாள்

இராவணன்

ஹம்ஸநாதம் ரூபக—தாளம்

11. நாதமலோ பதமருளும்
நமக்கென்றுமே மனதே (நா)

வேதபுராண கம சாஸ்திரா தியின்
ஆதாரமே (நா)

ஸ்வரமுன அரோக கண்டமு
நிறை ராகமு மீதுள்ளதோ
சுரரப தேசியமும் த்ருகுணமு
நிரதகதி தருமே
புரிபஜன பாக்யமலோ
யோகமாக ஸாதித்தது (நா)

இராவணன்

ஸகாண நீலாம்புரி

12. அப்ப நீ அம்மை நீ அய்பனு நீ
அன்புடைய மாமனு மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் எப்பொருளும் நீ।

ஒருகுலமும் சுற்றமும் ஓறாரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவ நீ ஏறூர்ந்த செல்வம் நியே

கோரஸ் (இலங்கையின் பஜனை)

கமாஸ் தாளம்—ஆதி

13. சம்போ கங்காதரா சந்திரசேகரா
ஹரா சிவ (ச)

அம்பலவாணனே ஆதரி அனுதனே
அடைக்கலமென்று நம்பி வந்தேன்
ஆதரிப்பது உன்பாரம் சொன்னேன் (ச)

காய மெடுத்தது எத்தனையோதரம்
கணக்கிலென்பாலிருக்குதே
மாயவலைக்குள் மாட்டிக்கொண்டேன்
மயங்குரேன் தயவில்லையோ
தாயும் தந்தையும் நியே
உன்னைத்தவிர வேரே ஒருவருமில்லை (ச)

சூர்ப்பணகை

கமாஸ் ஏக—தாளம்

14. கண்டேன் கண்டேன் அடா அண்ணா நான் அதை
பார்த்திடலாம் பஞ்சவடியிலே நான் அதைக்
கண்டேன்

தர்மசீலர் அயோத்தி தசரதன் வரபாலன்
அனுகூலன் அதிலோலன்—கைக்
கோதண்டமும் அரக்கர் ஜீவனை
கொள்ளை கொள்ளவந்த காலன்—அதை
பார்த்திடலாம் பஞ்சவடியில் யாவரும் (க)

ராம லக்ஷ்மணர் வடிவை என்னாலே
சொல்லப்போமோ சொல்லப்போமோ
சொல்லப்போமோ
காமராஜனழகும்—அவன்
காலின் தூசிக்கிணை யாமோ
அதைப்பார்த்திடலாம் பஞ்சவடியினில்
யாவரும் (க)

சூர்ப்பனகை

ரீதி கௌளை தாளம் திஸ்ரம்

15. காணவேணும் காணவேணும் லக்ஷ்மண்
காணவேணும் காணவேணும் (கா)

சீதையின் காலுக்கு நிகரோ பெண்கள்

குவளை விழிகளோ பாணம் அவள் வார்த்தை
கொண்டாலதுவே கல்யாணம்
இங்கிதவாக்கியம் தேவதா யோக்கியம்
மங்கையர்க்குள்ளே சிலாக்யம்
வாய்த்தாலுன் பாக்கியம் (கா)

தங்கக்கொடி போல் இடையும் சீவிவகிர்ந்த
சாய்ந்த பின்னலின் சடையும்
அவளோநல் ஐஸ்வர்யம்
அவளே காம்பீர்யம்
அவள் வந்தாலல்லவோ வீர்யம்
அப்போ முடியுமுன் கார்யம்

சூர்ப்பனகை

ராகம் — தன்யாசி

16. செந்தாமரை கண்ணோடுஞ் செங்கனிவாயினோடும்
சந்தார் தடந்தோளோடுந் தாழ்தடக்கைகளோடும்
அந்தார கலத்தோடு மஞ்சனக்குன்றமென்ன
வந்தானிவனுகு மவ்வல்வில்லி ராமன்

இராவணன்

காபி தாளம்—ஆதி

17. காலத்தாலே வருவதொன்றோ
காமத்தால் கனலும் வெந்தீயாம்
சீலத்தால் அவிவதன்றி என்னாளும்
செய்யத்தான் ஆவதுண்டோ என்னாளும் (கா)

தென்றல் என்னைப்பாயுதே
திங்களும் தணலாய்க்காயுதே (கா)

எந்தன்—கண்ணும் கருத்தும் நிகாரணி
எந்தன்—எண்ணம் பூர்த்திசெய்யும் பூரணி
நீயே ஏழுலகிற்கு நாயகி
எந்தன்—முக்திக்கு நல்லருள் தாயகி (கா)

மாரீசன்

காமஸ்—மாயா மாளவ கௌளை

18, தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயுமறியுமுலகின்றாயாகினைய
நியறிதியெட்பொருளுமவையுன்னை நிலையறியா
தாயாவாய் யாவரே தருமத்தின் தனிமூர்த்தி

ஸீதை

கௌரீ மனோகரி தாளம்—ஆதி

19. பர—ப்ரும்மஸ்வரூபமே ராமன்
பாரில் வந்தான் பரந்தாமன் (பரப்ருமம்)

பலர்—தாமரைக்கண்ணனே என்பார்
சிலர்—தசரதபுதல்வனே என்பார்
மானிடனல்ல இவனென்பார்
மையனுடைத்துலகமெண்பார் (ப்ரு)

ரவிகுலதிலகன் புவிபோற்றும்தீரன்—அவன்
கரதூஷணருக்குக்காலன்—அவன்
தேவமுனிவற்கு தேருதலளித்தவன்
சூராதிசூரன் என்நாதன்—ஸ்ரீராமச்சந்திரன்(ப்ரு)

இராவணன்

அடாணு தாளம் சாபு

20 லங்கைக்கிறைவன் நானே
ஈரேழுலகம் ஏற்றும் (ல)

நிலமுள்ள நலமெல்லாம் நின்னடி நல்கினேன்
உலகின் உவமை இல்லாய் உய்வேனோ
உன்னையல்லால்

மானின் பின்போன இருமானிடர் மீண்டும்
[வாரார்
எனினும் பலவெண்ணி ஏழைமைக் காளாவாய்
தேனின் இனிய சொல்லாய் தேவரில் யாரும் தம்
கோனென்பதறிந்துமே குறைசொல்லத்
துணிவாரோ

ஸீதை

கன்னடா தாளம்—ரூபகம்

21. மேருவை உருவல்வேண்டின்
விண்பிளந்தேகல் வேண்டின் (மே)

ஈரேழு புவனம் யாவும்
உற்றுவித்தெழுதல் வேண்டின் (மே)

சிரிய வல்ல சொல்லித் தலை
பத்துஞ் சிந்துவாயோ
ஆரியன் பகழிவல்லது
அறிந்திருந்து அறிவில்லாதாய் (மே)

இராவணன்

கேதாரகௌளம்

22. மொழிதரும் அமுதனங்கே கேளிது
முரணில்யாக்கை இழிதரும் மனிதரோடு
இன்றுயான் செருவல் செய்யல்
வழிதரு நெற்றியான்
வெள்ளி வெற்பெடுத்த தோட்கு
பழிதரும் அதனிற் சால
பயன்தரும் வஞ்சமன்றே

ஸீதை

ராகம் — மோகனம்

23. குன்று நி எடுத்த நாடன் சேவடிக்
கொழுந்தா லுன்னை
வென்றவன் புரங்கள்வேவதனிச் சரந்துறந்தமேரு
என்றுனைக் கணவனுற்றற் குறநிலாதிற்று வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்தவோசை கேட்டிலேபோலு
மம்மா

கோரஸ்

ஸுபோஷணி தாளம்—ஆதி

24. மகுடாபிஷேகம் கொண்டானே .
மணிமண்டப மதனிலே (ம)

இந்திராதி தேவர்களும்
இதர மன்னரும் வணங்கவே (ம)

வசிஷ்டாதி முனிவரும்
வாயு புத்திரனும் துதிக்க
லக்ஷ்மண பரத சத்ருக்ன
ஸீதா ஸமேத ராமனும் (ம)

ஜெய ஜெய ஜெய ஜெய ஜெய
ஜெய ஜெய ஜெய சீதா ராம் (ம)

மங்களம்

Golden Printing Works, Cottonpet, Bangalore City.

Miss SARASWATHI as "SITA"
in "SITAPAHARANAM"

RANJIT TOPS AGAIN!

THE "THOKAR OR THE KICK"

Featuring :—

MADHURI, KUMAR, CHARLIE, WAHIDHAN & Others.

★

"SANT TULSIDA

Starring :—

V. PAGNIS, (of Tukaram Fame)

VASANTI, (")

LEELA CHATNIS, RAM MARATHE & Others.

★

SUDAMA PRODUCTIONS :

PRESENT IN

SABITADEVI,
MOTILAL,
VASANTI,
MAZHAR.

"AP-KI-MARJI

OR

"AS YOU PLEAS

★

AWAIT OUR NEXT TAMIL H

Sole Distributors :—

SELECT PICTURES CIRCUIT

GANDHINAGAR, BANGALORE CITY